
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 | செப்டம்பர் - 1998 | இதழ் - 9




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. "தவணையில் முறையில் தன்னை விற்றுப் போட்டவன்" 1
2. நீங்கள் இருக்குமிடத்ததில். சபை ஏன் தேவைப்படுகிறது 9
3. ஆதி சபை பற்றி 13
4. பேதுரு முதல் போப் ஆண்டவரா ? 17
5. என்னையன்றி உனக்கு வேறா தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் 22
6 நில், கவனி, செல் 23
7. உங்களுக்காக ஒரு வீடு 26
8. உங்கள் சிந்தனைக்கு 28

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 SEPTEMBER-1998 Issue -9


## ஆசிரியவுரை

# "தவணை முறையில் தன்னை விற்றுப் போட்டவன்"

நாம் வாழும் இந்தக்காலம் "தவணை முறையின்" காலம். எல்லாமே தவணையில் கிடைக்கிறது. தேவையானது மாத்திரமல்ல, தேவையில்லாததும் கிடைக்கிறது. கிடைக்கிறது என்பதைக் காட்டிலும், "தவணை முறைத் திட்டம்" என்ற பெயரால் தலையில் கட்டப்படுகிறது என்பது இன்னும் பொருத்தமாக இருக்கும். இந்நாட்களில் மிகப்பிரசித்தி பெற்று விளங்கும் இத்திட்டம் பற்றி எல்லோருமே நன்கறிவோம். மக்களுடைய வரைமுறையற்ற பொருளாசைக்கு சளைக்காமல் தீனிபோட்டு, தகுதிக்குப் புறம்பான டாம்பீக வாழ்க்கைக்கு இத்திட்டம் வெகுவாக ஈடு கொடுக்கிறது. இதில் சிக்கிய அநேகர், தங்களை நிரந்தரக் கடனாளிகளாக மாற்றிக் கொள்வதோடல்லாமல், தங்களுடைய நிம்மதியான வாழ்வுக்கு தாங்களே குழிவெட்டிக் கொள்கின்றனர்.

எப்படியோ, "பொருட்கள்" தவணைமுறையில் விற்கப்படுவதும், வாங்கப்படுவதும் ஜனங்களுக்கு பழக்கப்பட்ட ஒன்றாகவும், சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவும் ஆகிவிட்டது. ஆனால், ஒரு "மனிதன்", தன்னையே தவணைமுறையில் விற்ற சம்பவம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. ஒருவேளை, எஜமானர்கள் அடிமைகளை விற்றதும், வாங்கியதும் சரித்திரத்திற்கு புதிரானதல்ல. ஆனால், பகட்டோடு வாழ்ந்த ஒரு "ராஜா" இங்கே விற்கப்பட்டுள்ளான். அதுவும் எப்படி? தன்னைத் தானே விற்றுள்ளான்.

அதுவும் தவணை முறையில். இவனைத் "தவணை முறையின் தந்தை" என்று சொன்னாலும் தவறில்லை என எண்ணுகிறேன். யார் அந்த முட்டாள் என்கிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள், சொல்கிறேன்.

ஒருவகையில், தவணைமுறை என்பதே கொஞ்சம் இழுக்கானது. ஆனால், இந்தப் படுபாதகன், இழுக்கான இந்தத் திட்டத்திற்கு மேலும் இழுக்கைத் தேடிக் கொடுத்துவிட்டான். எப்படியெனில், தவணை முறைத் திட்டத்தின் கீழாக விற்பவர்களுக்குத் தான் எப்பொழுதுமே லாபம். ஆனால், இவனுக்கு தன்னை விற்றதில் மிகப்பெரிய நஷ்டம். அப்படியானால், இந்தத் திட்டத்திற்கு இவன் செயல் இழுக்கைத் தேடி தந்தது தானே! சொல்லுங்கள். அவனைப் பற்றி வேதவசனம் சொல்லுகிறதைக் கவனியுங்கள். **"அப்பொழுது ஆகாப், எலியாவை நோக்கி : என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா? என்றான் . . . . அதற்கு அவன் : கண்டுபிடித்தேன்; கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய நீ உன்னை விற்றுப் போட்டாய்" என்றான்.** (I ராஜா. 21 : 20). தவணை முறையில் விற்றதாக இங்கே இல்லையென்கிறீர்களா? இல்லையில்லை, தவணை முறையில் தான் தன்னை விற்றுள்ளான் என்பதற்கு ஆதாரம் தருகிறேன், தொடர்ந்து படியுங்கள்.

அதற்கு முன்பாக, இந்த "ஆகாப்" பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்வோம். சாலமோன் ராஜாவுக்குப் பிறகு இராஜ்யம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து, வடக்கு ராஜ்யம் "இஸ்ரவேல்" என்றும், தெற்கு இராஜ்யம் "யூதா" என்றும் அழைக்கப்பட்டது. இந்த ஆகாப், வடக்கு இராஜ்யத்தை ஆண்ட ஏழாம் மன்னன். 22 ஆண்டுகள் அரசாண்டான். தகப்பன் பெயர் உம்ரி. ஆகாப் ராஜா, என்றாலே, அய்யோ அவனா! என்று சொல்லுமளவிற்கு, இவனுடைய நாட்கள் இருந்தாலும், இவனிடம் ஒரு அரசனுக்குண்டான சில அத்தியாவசிய தகுதிகளும் இருக்கவே செய்தது. பராக்கிரமம், சமயோஜிதம், ஐசுவரியம் ஆகியவையும் இவனுக்குச் சம்பந்தமில்லாததாக இல்லையென்பதை நாம் படிக்க முடியும்.

இவனுடைய நாட்களில், இஸ்ரவேலை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டே இருந்த சீரியரை எதிர்த்து பல தடவை யுத்தம் செய்தான். ஒருவேளை, தன் முயற்சியில் தோல்விகள் பல கண்டாலும், துவண்டு போகாமல், மீண்டும், மீண்டும் போரிட்டு, சீரியரை வென்று, ராஜாவாகிய பெனாதாத்தை சிறைபிடித்தான். (I ராஜா. 20 : 2). பிறகு ஒருமுறை ஏற்பட்ட யுத்தத்தில் மரித்துப் போனான் (I ராஜா. 22. 31). இச்சம்பவங்கள் இவனுடைய பராக்கிரமத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

அடுத்து, இவனுடைய சமயோஜிதத்துக்கு ஆதாரமாக, இவன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைக் காட்டலாம். உடன்படிக்கைகள் இவனுக்கு

தற்காலிக வெற்றியைத் தான் தந்தது என்பது வேறு விஷயம். ஆனால், சந்தர்ப்பங்களை அவன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டதை நாம் சாதாரணமாகக் கருதமுடியாது. முதலாவது, சிறைபிடித்த சீரிய ராஜாவாகிய பெனாதாத்துடன் ஒரு "உடன்படிக்கையை" ஏற்படுத்திக் கொண்டு அவனை விடுதலையாக்கினான். (I ராஜா. 20 : 34). அடுத்து தன்னுடைய திருமணத்தின் மூலம், சீதோனின் துறைமுகங்களை பயன்படுத்தும் வழியுண்டாக்கி, தேசத்தின் பொருளாதார நிலை வலுப் பெற வகை தேடினான். இன்னும், யூதாவின் இராஜாவாக இருந்த யோரமோடு சமாதான உடன்படிக்கை செய்து, தன் மகளை அவனுக்குக் கொடுத்தான். (II ராஜா. 8 : 18).

ஐசுவரியத்தைப் பொறுத்த அளவில், ஆகாபுக்கு தந்தத்தாலான மாளிகை இருந்தது (I ராஜா. 22 : 39). புகழின் உச்சியில் இருந்த தாவீதும், ஐசுவரியத்தின் எல்லைக்கோட்டை நெருங்கிவிட்ட சாலமோனும் தங்களுக்கு கேதுரு மரங்களாலான அரண்மனைகளையே கட்டியுள்ளனர். (II சாமு. 7. 21, I ராஜா. 7 : 2, 10 : 23). இவனுக்கோ "தந்தத்தாலான அரண்மனை". எவ்வளவு ஐசுவரியம் பாருங்கள்!

ஆனால், ஐசுவரியம், புத்தி, திறமை, பராக்கிரமம் ஆகிய அனைத்தும் இருந்தும் தன்னுடைய ஆன்மீக வாழ்வில் படுதோல்வி கண்டு, தோற்றுப்போனவர்களின் பட்டியலில் வெட்கமில்லாமல் தன்னையும் இணைத்துக் கொண்டான். ஐயோ, பாவம் என்று சொல்வதற்குக் கூட இடம் கொடுக்க மனம் மறுக்கிறது.

இவன் நாட்களில் இருந்த ஆன்மீக நிலை பற்றியும் சிறிது கூறுகிறேன். மகா தீர்க்கனாகிய எலியா இந்த ஆகாபின் நாட்களில் தான் வாழ்ந்தான். இந்த எலியா, மறுரூபமலையில், இயேசுவோடு தோன்றி, அவருடைய மரணத்தைக் குறித்து, விவாதித்தவன் (லூக். 9 : 30, 31). இவ்வளவு பெரிய தீர்க்கனாகிய எலியாவின் மேன்மையை உணராமல், அவனின் ஆலோசனைகளைப் புறம் தள்ளி, ஒரு கட்டத்தில் அவனைக் கொல்வதற்கும் தன் மனைவிக்கு அனுமதி கொடுத்தான். பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு ராஜமரியாதை கொடுக்கப்பட்டது. (I ராஜா. 18 : 19). அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு, கர்த்தரின் தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டார்கள். (18 : 4) எலியாவுக்கும், பொய்த் தீர்க்கதரிசிகள் 450 பேருக்கும் நடந்த ஆன்மீக யுத்தமும் இவன் நாட்களில் தான் நடந்தது. (I ராஜா. 21 : 1 16).

வேத பிரமாணத்திலிருந்தும், தேவ நீதியிலிருந்தும் பட்டவர்த்தனமாய் விலகி, வெகு தூரம் போய், திரும்பி வரமுடியாத எல்லையைத் தொட்டுவிட்டான் என்பதற்கு வேறொரு அசைக்க முடியாத சான்று தான், ஏழை மனிதனாகிய நாபோத்தின் கையகல நிலத்திற்கு ஆசைப்பட்டு, அதை ராஜஸ்தானத்திற்கு

சற்றும் சம்பந்தமில்லாத முறையில் பெற்றுக் கொண்ட சம்பவமாகும். (I ராஜா. 21 : 1–16). இவ்விஷயத்தில், அவன் மனைவியின் முந்தானைக்குப் பின் ஒளிந்து கொண்டு, தான் ஒரு கேவலமான மனிதன் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தான்.

இதற்குப் பிறகுதான் தேவன், எலியாவைக் கொண்டு, ஆகாபே, "நீ உன்னை விற்றுப்போட்டாய்" என்று சொன்னார். எடுத்த எடுப்பில் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல அவைகள். ஒருவேளை ஆகாபின் ஆரம்ப நாட்களில் அவனைப் பார்த்து, நீ ஒரு காலத்தில், ஒரு கட்டத்தில் உன்னை விற்றுப் போடுவாய் என்று யாராவது சொல்லியிருந்தால், அவன் அதை ஒத்திருப்பானா? அது மாத்திரம் ஒருபோதும், நடக்கவே நடக்காது என்று அடித்து, ஆணித்தரமாகச் சொல்லியிருப்பான். ஆனால் நடந்தது என்ன? அவன் தன்னை விற்றுப்போட்டான்.

ஆகாப், தவறுகள் பல செய்திருந்தாலும் கூட, இறுதியில் தான், அவன் தன்னை விற்றுப்போட்டான் என்று சொல்லியிருக்கிறபடியால், அவன் தன்னை கொஞ்ச, கொஞ்சமாகத் தான் விற்றிருக்ககமுடியும். அப்படித்தானே அப்படியானால், அவன் தன்னை தவணைமுறையில் விற்றுப்போட்டான் என்று சொல்லலாம் தானே. சரி, அவன் தன்னை குறைந்தது மூன்று தவணைகளில் விற்றிருக்கமுடியும் என்று நாம் காணலாம்.

## I. முதல் தவணை - திருமணம்

மூன்று தவணைகளில், முதல் தவணை அவனுடைய திருமண உறவுதான். இவனுடைய தோல்விக்கு இது தான் முதல்படி. புறஜாதிகளுக்குள்ளாக மணஉறவு வைத்துக் கொள்ளக் கூடாதென்ற தேவ கட்டளையைப் பார்க்க, இவனுடைய கண்கள் மறுத்துவிட்டது. இவனுக்கிருந்த அறிவும், ஆற்றலும் இவனுடைய நன்மைக்கு பயன்படவில்லை. ஆகாத உறவு ஆபத்தானது என்பதற்கு அநேக ஆதாரங்கள் உண்டு. பலசாலியாகிய சிம்சோனுக்கு ஏற்பட்ட அவமானமும், ஞானியாகிய சாலமோனுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியும் ஆகாத உறவின் பிரதிபலிப்புகளே.

மனைவி, கணவனுக்கு "ஏற்றவளாக" இருக்க வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். ஆகவே தான், ஆதாமுக்கு "ஏற்ற துணையாக" ஏவாளைக் கொடுத்தார். (ஆதி. 2 : 18), மனைவி சரீரப்பிரகாரமாக மாத்திரம் ஏற்றவளாக இல்லாமல், மன ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் ஏற்றவளாக இருக்க வேண்டுமென்பதே இதன் பொருள். ஆனால், ஆகாப் தேவனின் இந்தத் திட்டத்தை ஆடிக் காற்றிலே பறக்க விட்டுவிட்டு, தன் இஷ்டம் போல் நடந்து கொண்டான்.

இன்றைக்கு மனிதர்கள் திருமணத்தின் போது பயன்படுத்துகிற அதே அளவுகோலை அவனும் பயன்படுத்தினான். தகுதி, அந்தஸ்து, அழகு, வருமானம், லாபம் என்று இந்த வகையிலே பார்த்தானேயொழிய, அவளின் பக்தியைப் பரிசோதிக்கவில்லை. யெகோவாவுக்கும் அவளுக்கும் இருக்கிற உறவு என்னவென்று பார்க்கவில்லை. கர்த்தர் இவனுக்குக் கொடுத்திருந்த அறிவை ஒரு துளி பயன்படுத்தியிருந்தால் கூட இவன் தன்னை ஓரளவாவது காப்பாற்றியிருக்கலாம். ஆனால் இவனோ, படுபாதாளத்தில் வலியப்போய் விழுந்து கொண்டான். ஆம், யெகோவாவுக்கு சற்றும் சம்பந்தமில்லாத, மெய் வணக்கத்தை அறிந்திராத ஒருத்தியை மனைவியாக்கிக் கொண்டான். இவளெல்லாம் ஒரு பெண்ணா! என்று உலகம் இன்று இடித்துரைக்கிறவர்களையெல்லாம் பார்த்து, எனக்கு இணையாக முடியுமா? என்று இன்னமும் இவள் சவால் விட்டுக் கொண்டுள்ளாள்.

யேசபேலாகிய இவளுடைய குடும்பப் பின்னணியைக் கொஞ்சம் கேட்டிருந்தால் கூட இவன் தன்னை தற்காத்திருக்கலாம். இவளுடைய தகப்பனாகிய ஏத்பாகால் ஒரு ராஜாவாக மாத்திரமல்லாமல், பாகாலுக்கு பூசாரியாகவும் இருந்துள்ளான். இவனுடைய பெயரிலேயே "பாகால்" என்ற வார்த்தை ஒட்டியிருக்கிறதென்றால், இவனின் பாகால் பக்தியை நாம் அறிந்து கொள்ளலாம். அதுமாத்திரமல்ல, இவன் ஒரு கொலைகாரன். தனது, 36வது வயதில், பதவிப்பித்துக்கு அடிமைப்பட்டு, தன் உடன் பிறந்த சகோதரனைக் கொன்று ஆட்சிக் கட்டில் ஏறியிருக்கிறான்.

ஆகவே, யேசபேலுக்கு, இளம் வயதில் பால் மாத்திரம் ஊட்டப்படாமல் விக்கிரக வெறியும், கொலை வெறியும் ஊட்டப்பட்டிருக்கிறதை நாம் அறிந்து கொள்ளலாம். இவளிடத்திலிருந்து, இவன் தப்பிக்க வழி எப்படி கிடைக்கும்?

ஆகாபின் மீது, யேசபேலுக்கு இருந்த செல்வாக்கைக் குறித்து, வேதம் எப்படிக் குறிப்பிடுகிறது பாருங்கள். **"தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்ட படியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப் போட்ட ஆகாபைப் போல் ஒருவனுமில்லை.** (I ராஜா. 21 : 25) என்று. நெஞ்சுரமும், சமயோசிதமும் கொண்ட இந்த ராஜா, சாவி கொடுத்தால், இஷ்டம்போல் ஆட்டம் போடும் பொம்மையாக மாறிவிட்டான், என்ன பரிதாபம்!

இவன், மணமுடித்தவுடன், இவன் தன்னை விற்றுப்போட்டான் என்று வேதாகமம் சொல்லாதபடியால், திருமணத்தை, விற்றுப்போடுவதற்கான முதற்படி என்று சொல்லமுடியும்.

அன்பர்களே, ஒருவனோ அல்லது ஒருத்தியோ செய்யும் திருமணங்கள், அவர்கள் தங்களை விற்றுப் போடுவதற்கான முதல்படியாக இருக்க

முடியுமென்பதால், நாம் திருமண உறவில், அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

## II. இரண்டாவது தவணை - சமரசம்

தன்னை விற்றுப்போடுவதற்கான இரண்டாவது தவணை, அவனுடைய சமரச புத்தி. அதாவது, தீமையை அனுசரித்துப் போகும் குணம். திருமணத்துக்கு முன்னான இவனுடைய வாழ்க்கையும் தேவனுக்குப் பிரியமானதாயிருந்திருக்க நியாயமில்லைதான். ஆனால், பாகாலை வணங்கியது, இவன் திருமணமானவுடன் செய்த காரியமென்று வசனம் கூறுகிறது. "நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களில் நடப்பது, அவனுக்குக் கொஞ்ச காரியமென்று நினைத்தாற் போல், அவன் சீதோனியரின் ராஜாவாகிய, ஏத்பாகாலின் குமாரத்தியாகிய யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து, அதைப் பணிந்து கொண்டு, தான் சமாரியாவில் கட்டின பாகாலின் கோயிலில் பாகாலுக்கு பலிபீடத்தை எடுப்பித்தான்" (I ராஜா. 16 : 31, 32).

இங்கே, "பாகாலையும் சேவித்து" என்ற வார்த்தையை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். "பாகாலையும்" என்று சொல்லும்போது, ஏற்கனவே, சேவித்து வந்ததோடு, இன்னொன்றையும் சேர்த்துக் கொண்டுள்ளான். ஆம், யெகோவா வணக்கத்தோடு, பாகால் வணக்கத்தையும் சேர்த்து செய்துள்ளான். அதாவது, தன்னுடைய பக்தியோடும், நம்பிக்கையோடும் சமரசம் செய்துகொண்டான். இந்த நிலையில், இவனால் நீடித்திருக்க முடியவில்லை. எலியா சொன்னது போல், இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடக்க முடியாமல் யெகோவாவா அல்லது யேசபேலா என்ற நிலை வந்தபோது, யெகோவாவை இவன் கைவிடநேர்ந்தது. மெய்த் தேவனோடு, இவனுக்கிருந்த கொஞ்சநஞ்ச உறவும் அடியோடு அற்றுப் போயிற்று.

இப்படித்தான் முடியுமென்பது இந்த ஆகாபுக்கு ஏன் தெரியவில்லை? மலைப் பிரசங்கத்தில் இக்கருத்தை நமதாண்டவரும் வலியுறுத்தியுள்ளார். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனை பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது" (மத். 6 : 24). ஒருவனாலும் கூடாது என்று இயேசுக் கிறிஸ்து சொல்லியிருக்கும் போது, அது ஆகாபினால் மாத்திரம் கூடுமா? யாராலும் கூடாது.

இந்த ஆகாப், தேவனுக்கு ஒருபோதும் பயப்பட்டு நடந்ததேயில்லையென்று சொல்ல முடியாது. ஏனெனில், எலியாவைக் கொண்டு

தேவன், இவன் சந்ததிக்கு வரும் அழிவைக் குறித்துச் சொன்னபோது, பயந்து நடுங்கி தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியுள்ளான்.கவனியுங்கள். **"ஆகாப், இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் சரீரத்தின் மேல் இரட்டைப் போர்த்துக் கொண்டு, உபவாசம் பண்ணி, இரட்டிலேபடுத்துத் தாழ்மையாய் நடந்து கொண்டான்"** (I ராஜா. 21 : 27).

தேவனுக்குப் பயப்படும் பயம் இருந்தும், தன்னுடைய சமரச புத்தியினால் தேவனை விட்டு விலகிப் போக நேர்ந்தது.

இன்றைக்கும், இதே நிலை தான் தேவனுக்குப் பயப்படுகிற மக்களிடம் உள்ளது. இரண்டையும் சேர்த்துச் செய்வது, ஒருபோதும் தேவனுக்குப் பிரியமானதல்ல. ஏனெனில், கிட்டத்தட்ட எல்லாமே தோல்வியில் தான் முடிந்துள்ளது. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு சொல்லும் போது, **"நீ அனலாயாவது, குளிராயாவது இருந்தால் நலமாயிருக்குமென்று"** சொல்லப்பட்டுள்ளது. (வெளி. 3 : 15).

ஆகவே, நாம், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் சமரசப் போக்கிற்கு ஒருபோதும் இடம் தரவேண்டாம். யெகோவா ஒரே கர்த்தராக இருக்கிறபடியால் எப்படி சமரசத்திற்கு வழியில்லையோ அதைப் போலவே, ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், (சபை) ஒரே ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் என்பதிலும் சமரசத்திற்கு இடமேயில்லை. ஆகவே, குடும்பத்தோடும், சமுதாயத்தோடும், உலகத்தோடும் ஒத்துப்போக வேண்டுமென்று விரும்பி, நம்முடைய ஆத்துமாவை இழந்து போக வேண்டாம்.

இந்த ஆகாப், தன்னுடைய நம்பிக்கையோடு சமரசம் செய்து கொண்ட நிலையிலும், இவன் "தன்னை விற்றுப் போட்டவன்" என்று வேதாகமம் சொல்லாததால், இன்னுமொரு தவணை இருக்கிறதென்று தெரிகிறது.

## III. மூன்றாவது தவணை - ஆசைக்கு அடிமைப்படல்

தகுதியற்ற உறவை திருமணத்திற்காக தேடியபோதும், அந்த திருமணத்தின் மூலம் விக்கிரக வணக்கத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்த போதும், இவன் தன்னை "விற்றுப் போட்டான்" என்று வேதாகமம் சொல்லாமல், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பிறகே இந்த அவப்பெயரால் அழைக்கிறது. ஒருவன் திருந்துவதற்கு இனிவாய்ப்பும், வழியும் இல்லையென்ற நிலை வந்தபோதெல்லாம் வேதாகமம், இப்படி அழுத்தம் திருத்தமாகவே பேசியுள்ளது.

அப்போஸ்தலன் பவுல் தெசலோனியருக்கு எழுதும்போது இப்படி தீர்மானமான கருத்தோடு பேசியுள்ளார். **"ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும்**

**ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்".** (II தெச. 2 : 11, 12) என்று.

எபிரேய ஆசிரியர் கூறும்போது, " . . . **மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்"** என்கிறார். (எபி. 6 : 6).

சரி, அப்படி என்ன நடந்தது என்று தெரிந்து கொள்வோம். ஆகாபின் அரண்மனை அண்டையில் குடியிருந்த, யெஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு, ஒரு திராட்சை தோட்டம் இருந்தது. அந்த திராட்சை தோட்டத்தின் மீது ஆசை வைத்து அவனிடம் அதைக் கேட்டான். எதற்குத் தெரியுமா? கீரைக் கொல்லையாக்குவதற்கு. ஒரு இராஜ்ஜியத்திற்கு அதிபதியாக இருந்து, திரளான செல்வங்களை தனக்காக வைத்திருப்பவனுக்கு ஆசையைப் பார்த்தீர்களா? ராஜாவின் அரண்மனைக்குப் பக்கத்திலிருக்கிறபடியால், நமக்கு ஒரு பிரச்னையுமிருக்காது, யாரும் நம்மிடத்தில் வம்புக்கு வரமாட்டார்கள் என்ற நினைப்பில் இருந்த இவனுக்கு, இது எப்படியிருந்திருக்கும்?

பாவம் அந்த ஏழை நாபோத் பயந்து போய், கர்த்தரை நோக்கிப் பார்க்கிறான். **"நாபோத் ஆகாபை நோக்கி : நான் என் பிதாக்களின் சுதந்திரத்தை உமக்குக் கொடாதபடி, கர்த்தர் என்னைக் காப்பாராக என்றான்"** (I.ராஜா. 21 : 3). இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள தான் கர்த்தரை நம்பியிருக்கிறேன் என்றும் சொல்கிறான். அப்படியும் இந்த ஆகாப் மனமிரங்கவில்லை. சிறு பிள்ளையைப் போல், அடம்பிடித்து, தனது மனைவியின் சதித்திட்டத்தின் மூலம், நாபோத்தைக் கல்லெறிந்து கொன்று, அதைப் பெற்றுக் கொள்ளப் போனபோது தான், தேவன் **"ஆகாப் தன்னை விற்றுப்போட்டான்"** என்று கூறுகிறார்.

பொருளாசையை, தேவன் எவ்வளவு கடுமையாகப் பார்க்கிறார் என்பதற்கு இதைவிடச் சரியான சான்று தேவையில்லை. பொருளாசை, ஒரு விக்கிரக ஆராதனை என்று வேதாகமம் கூறுகிறது. "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ. 3 : 5).

நிஜமான விக்கிரக ஆராதனையைக் காட்டிலும், பொருளாசை என்கிற விக்கிரக ஆராதனை மிகவும் ஆபத்தானது. என்ன இப்படிச் சொல்கிறீர்கள் என்கிறீர்களா? நான் என்ன செய்யட்டும், இது வேதத்தின் கருத்து.

எப்படியெனில், நிஜமான விக்கிரக ஆராதனையாகிய பாகால் வணக்கத்துக்கு ஆகாப் சென்றபோது, அவன் தன்னை விற்றுப் போட்டான் என்று வேதாகமம் குறிப்பிடாமல், நாபோத்தின் இடத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாய் அவன் போனபோது தான் சொல்கிறது.

அதாவது, நிஜமான விக்கிரக வணக்கத்திலிருக்கும் ஒருவன் மீண்டு வர வழியிருக்கிறது. ஆனால், பொருளாசை என்ற விக்கிரக வணக்கத்திற்கு அடிமைப்பட்டவன் ஒரு போதும் மீளவே முடியாது என்பதே இதன் பொருள்.

என்ன பயமாக இருக்கிறதா? நான் பக்தியின் வேஷத்தையும் போட்டுக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் பொக்கிஷங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன் என்ன ஆகுமோ என்கிறீர்களா? நான் விக்கிரகங்களை வணங்குகிறவர்களை அருவருப்போடு பார்த்துக் கொண்டுள்ளேன், என் நிலைமை அதைவிட மோசமாகிவிடும் போல் உள்ளதே என்று எண்ணுகிறீர்களா?

அன்பர்களே, இன்று ஆன்மீகவாதிகளுக்கு பெரும் சவாலாக இருக்கும் பிரச்சினை பொருளாசை தான். கிட்டத்தட்ட அனைத்து பாவங்களையும் தூக்கி எறியும் ஒருவன் கூட, இதில் சிக்கிக் கொள்கிறான். பொருளாசையினால் தங்கள் ஆத்துமாக்களை அழித்துக் கொண்டவர்கள் அநேகர். ஆகாபோடு, இப்பட்டியல் முடிந்துவிட்டது என்று எண்ணாதீர்கள். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் (மத். 27 : 3), பணக்கார வாலிபன் (மத். 10 : 17– 22) அனனியா, சப்பீராள் (அப். 5), களஞ்சியங்களை இடித்துக்கட்டுவேன் என்று சொன்ன ஐசுவரியவான் (லூக். 12) என்று பட்டியல் நீள்கிறது.

இன்று அநேகர், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தயங்குவதற்கு பொருளாசையும் ஒரு காரணம். ஏற்றுக் கொண்டவர்கள் இழந்து போவதற்கும் இது ஒரு காரணம். ஆகவே இவ்விஷயத்தில் நம்முடைய நிலையை நாம் தற்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம். நாம் ஏற்கனவே பார்த்த மாதிரி, தேவன் இப்பாவத்தை மிகக் கடுமையாகப் பார்க்கிறார். நாம் திரும்பி வரமுடியாத எல்லைக்கு, இப்பாவம் நம்மை இழுத்துச் செல்கிறது. நம்முடைய ஆத்துமாவை இழந்து போகச் செய்கிறது. ஆகவே, ஜாக்கிரதையாயிருப்போம்.

அருமையான தேவப் பிள்ளைகளே, ஆகாபைப் போலவே, நாமும், நம்முடைய சூழ்நிலைகளின் அடிப்படையில் நம்மைக் கொஞ்ச கொஞ்சமாக விற்றுப் போடுவதற்கு வாய்ப்புண்டு. இந்தக் காரியம் நம்மையுமறியாமல் நடந்து விடும். ஆகவே, ஞானி சாலமோன் பிரசங்கியில் கூறியுள்ளது போல், **“தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோமாக”.** (பிர. 12 : 13).

**S.ராஜநாயகம்.**

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!! ஜெபியுங்கள்!!!

பங்கு பெறுங்கள்! பங்கு பெறுங்கள்!!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்
உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்
இணைந்து நடத்தும்

# முதல் வேதாகம கருத்தரங்கம்

நாள் : **1,2,** அக்டோபர் **1998**
வியாழன், வெள்ளி - அரசு விடுமுறை நாட்கள்

நேரம் : தினமும் காலை **9:30** மணி முதல் **12:30** மணி வரை
மாலை **2** மணி முதல் **5** மணி வரை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு
காங்கயம் - **638 701**

பேச்சாளர்கள் : **தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும்**

**10 தேவ தாசர்கள்**

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும் தங்குமிடமும் இலவசம்.

பதிவு கட்டணம் ரூ. 20/- மட்டுமே

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இட வசதி உண்டு.

தொடர்பு முகவரி:-

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு காங்கேயம் 638701

போன். 04257-20030

# நீங்கள் இருக்குமிடத்தில், சபை ஏன் தேவைப்படுகிறது?

இந்தத் தொடர் பாடத்தில், நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஏன் தேவைப்படுகிறது என்பதை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஏற்கனவே சொன்னதுபோல் சபையிருக்குமானால் மிக நன்று. ஒருவேளை இல்லையென்றால், உங்கள் பகுதியில் சபை தேவைப்படுகிறது.

நாங்கள் ஏதோ இன்னும் ஒரு சபையைக் குறித்து இங்கு பேச வரவில்லை. நீங்கள் இருக்குமிடத்தில், பல சபைகள் இருக்கக்கூடும். பிரிவினைச் சபைகள் குறித்தோ, மனிதன் உருவாக்கிய சபைகளைப் பற்றியோ பேசவில்லை. மாறாக, வேதாகமத்தில் இடம்பெற்றிருக்கிற கர்த்தருடைய சபையைக் குறித்தே பேசுகிறோம். அந்த சபை கர்த்தருக்கு சொந்தமானது. அந்த ஒரே சபைக்காகத் தான் கிறிஸ்து மரித்தார். அந்த சபைக்குத்தான் அவர் இரட்சகராகவும், தலைவராகவும் இருக்கிறார். அந்த சபை அவருடைய பெயரைத் தரித்திருக்கிறது. இப்படிச் சொல்வது, நீங்கள் பிரிவுச் சபையில் அங்கத்தினராய் இருந்தும், இழந்துபோக வாய்ப்புண்டு என்று பொருள். மனிதனால் உருவாக்கப்பட்ட சபைகளைச் சேர்ந்தவர்கள், ஒருவன் எந்தச் சபையிலும் அங்கத்தினராக இல்லாத நிலையிலும் இரட்சிக்கப்படமுடியும் என்று சொல்வார்கள். ஆகவே தான் உங்களுக்காகவும், கர்த்தருக்கு கீழ்ப்படிய விரும்பும் மற்றவர்களுக்காகவும் கர்த்தருடைய சபை அங்கு தேவைப்படுகிறது என்று சொல்கிறோம்.

கர்த்தருடைய சபை முக்கியமானது. சபை இரட்சிப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், ஒருவன் இரட்சிக்கப்பட சபையில் அங்கத்தினராக இருக்கவேண்டும். உண்மையில், ஒருவன் இரட்சிக்கப்பட்டால், அவனை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார். (அப். 2 : 47). இங்கே, பவுல் அப்போஸ்தலன் வார்த்தையைக் கவனியுங்கள். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராக இருக்கிறார்". (எபே. 5 : 23). கிறிஸ்து, சரீரத்திற்கு இரட்சகர் என்று கூறுவதை கவனியுங்கள். சரீரம் என்றால் என்ன? எபே. 1 : 22, 23 மற்றும் கொலோ. 1 : 18ன் படி சரீரம் என்பது சபை. அதன் பொருள், கிறிஸ்து சபைக்கு இரட்சகராக இருக்கிறார். அப்படியானால், எத்தனை சரீரம் இருக்கமுடியும்? மீண்டும் பவுல், ஒரே ஒரு சரீரம் என்று தான் கூறுகிறார். (எபே. 4 : 4). சபை என்பதும் சரீரம் என்பதும், ஒரே பொருளைத் தந்து, ஒரே சரீரம் என்று சொல்லப்படுமானால், அதன் தீர்மானமான பொருள் ஒரே ஒரு சபை தான் என்பதாகும். ஏன், கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்பதற்கு இது சரியான பொருள் கொடுக்கிறது. அது மாத்திரமல்ல, நீங்களும், உங்களோடிருக்கும் மற்றவர்களும், அந்த ஒரு சபையில்

அங்கத்தினராயிருந்து, தேவனைப் பிரியப்படுத்த நீங்கள் இருக்கும் இடத்தில் சபை இருக்க வேண்டுமென்பதிலும் அர்த்தம் இருக்கிறது.

அங்கு சபை இருக்க வேண்டுமென்பதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. நீங்களும், சபையின் மற்ற அங்கத்தினர்களும் சேர்ந்து, ஆராதனை செய்யும்படியாய் ஒரு கூட்ட மக்களை ஏற்படுத்த அது உதவும். நீங்களும், மற்றவர்களும் அங்கிருந்து, சபை கூடி வருதல் இல்லையென்றால், நீங்கள் அங்குள்ள மற்ற பிரிவுச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்குமளவுக்கு பெலவீனப்பட்டுப் போகலாம். கர்த்தருடைய சபை மக்களோடு சேர்ந்து கூடி வரமுடியவில்லையென்பதற்காக, பிரிவினைச் சபையோடு சேர்ந்து ஆராதிப்பது, பிரச்சினைக்குத் தீர்வாகாது.

நீங்கள் ஏன் மற்ற பிரிவினைச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்க முடியாதென்பதற்கு காரணம் தருகிறேன். நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறீர்கள் என்றால், அதன் பொருள், நீங்கள் வேறெந்த பிரிவினைச் சபையிலும் அங்கத்தினரல்ல என்பது. கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவுக்குச் சொந்தம். அவர் பெயரைத் தரித்திருக்கிறது. இன்றும் அதன் ஆராதனை முறை, போதனைகள் அனைத்தும் மற்ற பிரிவினைச் சபைகளிலிருந்து வித்தியாசமானது. அப்படியானால், கிறிஸ்துவுக்குச் சொந்தமில்லாத ஒரு சபையோடு சேர்ந்து நீங்கள் எப்படி ஆராதிக்க முடியும்? அவர்கள் இசைக்கருவிகளை வைத்துப் பாட்டு பாடுவதால் நீங்கள் அவர்களோடு சேர்ந்து பாடமுடியாது. அப்போஸ்தலன் பவுல், **“நாம் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் செய்ய வேண்டுமென்று”** கூறுகிறார். (எபெ. 5 : 19). அவர்கள் இரட்சிக்கப்படாதவர்களாயிருக்கிறபடியால், நீங்கள் அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க முடியாது. தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்பேன் என்று தான் தேவன் வாக்களித்துள்ளார். பாவிகளின் ஜெபத்தையல்ல. (யோவா. 9 : 31). அவர்கள் தேவனுடைய வார்த்தைகளோடு, மனித கோட்பாடுகளையும் சேர்த்திருப்பதால், அவர்களோடு சேர்ந்து, நாம் வேதத்தைப் படிக்கவும் முடியாது. அவர்கள் வாரத்தின் முதல்தோறும், கர்த்தருடைய பந்தியை கடைபிடிக்காததால், நீங்கள் கர்த்தருடைய பந்தியிலும் பங்குபெற முடியாது. (அப். 20 : 7). தங்களுடைய காணிக்கையைக் கொண்டு அவர்கள் கள்ள உபதேசம் செய்வதால், நாம் கர்த்தருக்கு காணிக்கையும் கொடுக்க முடியாது. அவர்களோடு நீங்கள் ஐக்கியம் கொள்ளவும் முடியாது. அவர்கள் கர்த்தருடைய சபையில்லாதபடியால், உபதேசத்தில் நிலைத்திருங்கள் என்று ஊக்கப்படுத்தவும் முடியாது. ஆகவே, இந்தக் காரணங்களினால், நீங்கள் ஏதாவதொரு பிரிவினைச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்க முடியாது.

நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையில்லையென்றால், நீங்கள் ஒட்டுமொத்தமாக உங்கள் பக்தி நிலையிலிருந்து விலகிப் போகும் ஆபத்தும் உண்டு. கிறிஸ்துவின் சபையும் இல்லை. பிரிவுச் சபையாரோடு சேர்ந்து

ஆராதிக்கவும் முடியாது, வேறென்ன செய்ய முடியும்? என்று நீங்கள் வாதிடலாம். இப்படிச் சொல்லி வாதிடுவதும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. மாறாக, இந்தச் சூழ்நிலையில், உங்களால் ஏதாவது செய்யமுடியும் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அங்கு வாழ்ந்திருக்கலாம். அஞ்சல் வழியில் வேதாகமத்தைக் கற்றிருக்கலாம், வானொலியில் சுவிசேஷப் பிரசங்கங்கள் கேட்டிருக்கலாம், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து உங்கள் பகுதியில் நீங்கள் ஒருவர் தான் கிறிஸ்தவன் என்று அறிந்திருக்கலாம். அல்லது சபை இருக்கின்ற ஒரு இடத்திலிருந்து, அப்பகுதிக்கு குடிபெயர்ந்து வந்திருக்கலாம், ஒருவேளை, நீங்கள் அப்பகுதியிலிருப்பதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், நீங்கள் அங்கிருப்பதற்காக தேவனுக்கு நன்றி. நீங்கள் இருக்கும் இடத்தில் சபையைத் தொடங்குவதற்கு, இது ஒரு நல்ல தருணமாக இருக்கட்டும். ஒருவேளை, நீங்கள் கேட்கலாம், “கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதற்கு நான் எம்மாமித்திரம்?” என்று. பல சாக்குப் போக்குகளை நீங்கள் சொல்லமுடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நீங்கள் இளைஞராக இருந்தாலும், முதிர்வயதிலிருந்தாலும், ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்தாலும் அல்லது வேறு எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமிருந்தால் அது உங்களால் கட்டாயம் முடியும். நமது அடுத்த பாடத்தில், சபையை ஆரம்பிப்பதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை படிக்க அதிக நேரத்தை ஒதுக்குகிறேன். ஆனால், இப்பொழுது, சபை ஏன் அங்கிருக்க வேண்டுமென்பதற்கான காரணத்தை மேலும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நீங்களும், உங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களும் அங்கு வசிப்பதாலும், உங்கள் பகுதியைச் சுற்றி இன்னும் பலர் இருக்கிறபடியினாலும் அங்கு சபை அவசியமாயிருக்கிறது. நீங்களும், சபையும் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவை காட்டுகிறீர்கள். நீங்கள் தேவ உண்மையை வெளிக்காட்டி, ஜனங்கள் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்குமான வேறுபாட்டை உணர்ந்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறீர்கள். சத்தியத்தை எடுத்துச் சொல்லும்படியாய் சபையானது அங்கு இல்லையானால், அப்பகுதி மக்கள், தேவசித்தத்தை அறிந்து கொள்ளாமல் போகலாம். கர்த்தருடைய வழியைக் காட்டும் ஒளிவிளக்காய் சபை திகழ்கிறது. சபையில்லையானால், அங்கு இருள் தான் மிஞ்சும்.

தேவனை ஆராதிப்பதற்கு மாத்திரம் அங்கு சபை இல்லாமல், கிறிஸ்துவின் நற்செய்தியை உற்சாகத்தோடு உபதேசிக்கவும் இருக்கவேண்டும். இதை ஆராதிப்பதன் மூலமும் செய்யமுடியும். இன்னும், நற்செய்திக் கூட்டங்கள், தனிப்பட்ட ஊழியம், பத்திரிக்கை, கைப்பிரதிகள் விநியோகம் போன்றவற்றின் மூலமும் செய்யமுடியும். தேவசித்தத்தை வெளிப்படுத்த பல வழிகள் உண்டு. ஆனால், இவைகளை ஒரு சபை தான் தலைமையேற்றுச் செய்ய வேண்டும்.

இதைச் செய்வதற்கு சபை எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்? அல்லது எவ்வளவு அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்? இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத். 18 : 20) அதன் பொருள், நீங்கள், உங்களோடு இன்னொரு கிறிஸ்தவர் இருந்தால், இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு சபையை ஆரம்பிக்க முடியும். அதன் பிறகு எண்ணிக்கையினடிப்படையில் அது எவ்வளவு பெரிதாக வேண்டுமானாலும் வளரலாம்.

இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டது தான் கர்த்தருடைய சபை என்பதும், கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களை அவர் இரட்சிக்கிறார் என்பதும், இரட்சிக்கப்படுகிறவர்களைத்தான் தமது சபையில் சேர்க்கிறார் என்பதும் நினைவிலிருக்கட்டும். பிறகு, கூடி ஆராதித்து, கர்த்தருக்காக வேலை செய்வோம் என்கிற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்டு, கர்த்தருடைய சபை ஆரம்பமாகிறது.

ஒரு பிராந்திய சபையென்பது, உலகப்பிரகாரமான காரியங்களுக்காக கூடிவரக்கூடிய ஒரு சபைக் கட்டிடமல்ல. உண்மையில், ஒரு சபை எங்கு கூடிவருகிறது என்பது ஒரு பிரச்னையே அல்ல. சபையானது, தனக்குச் சொந்தமாக ஒரு கட்டிடத்தை வைத்துக் கொள்ளமுடியும் அல்லது ஒரு வீட்டிலே ஆரம்பிக்கலாம், ஒரு வாடகை கட்டிடத்திலோ, பள்ளிக் கட்டிடத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு இடமாக கூட அது இருக்கலாம். கர்த்தருடைய சபையைப் பொறுத்தளவில், சபை எங்கு கூடுகிறது என்பதைக் காட்டிலும், யார் கூடுகிறார்கள் என்பதே முக்கியம்.

சபையானது, கிறிஸ்துவின் சபை என்று அறியப்படும் அல்லது, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெயரை அது தரித்துக்கொள்ளும். அதனுடைய ஆராதனை, போதனை இன்னும் அது செய்கின்ற அனைத்தையும் வேதவசனங்களின் ஆளுகையின்படி தான் செய்யும். கிறிஸ்துவின் காரியத்தைப் பரப்புவதே இதன் பிரதான பணி. இதன் மூலம், கிறிஸ்துவை கனப்படுத்த வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனாகவும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினனாகவும் இருப்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதாயிருக்கிறதென்று பாருங்கள். ஒரு பிராந்திய சபையின் அங்கத்தினனாக இருந்தாலும், ஒருவேளை கர்த்தருடைய சபையே இல்லாத இடத்தில் இருந்தாலும், உண்மை யாதெனில், ஒரு சபையானது வளர்ச்சி பெற, நீங்கள் ஒரு முக்கியமானவராகவும், அல்லது புதிதாக ஒரு பிராந்திய சபையை உருவாக்கும் கருவியாகவும் நீங்கள் இருக்கமுடியும். இது மகத்தான சிலாக்கியம்.

**J.C.சோட்.**

| உண்மையைத் தேடி | பாகம் - 6 |
|---|---|

பெண்கள் பகுதி

# ஆதி சபை பற்றி

இரவு உணவு வேளைக்குப் பிறகு ரேச்சல், தீமோத்தேயுவின் அருகில் அமர்ந்து, கிட்ட அனைத்து அவனுடைய கருமையான தலைமுடியை முத்தமிட்டவாறே, "நான் உனக்காக தேவனுக்கு மிகுந்த நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன் என்று அவன் காதுகளில் கிசுகிசுத்தாள்". எங்களுடைய வாழ்க்கையில் நீ அநேக நல்ல காரியங்களைக் கொண்டு வந்துள்ளாய். உன்னை மிகவும் நேசித்து, நல்வழியில் மாத்திரம் நடத்தும்படிக்கு, நாங்கள் ஞானமுள்ள பெற்றோராயிருக்க ஜெபிக்கிறோம். ஒரு குழந்தையைப் பராமரித்து வளர்ப்பது ஒரு பெரிய பொறுப்பென்பது, நீ பிறப்பதற்கு முன் நான் ஏன் உணராமல் போனேன்?".

அப்பொழுது ஆண்ட்ரூ தோட்டத்திலிருந்து உள்ளே வந்து, ரேச்சல் குழந்தையை ஓயாமல், முத்தமிடுவது கண்டு சிரித்தவாறே முத்தமிட்டே எல்லா முடிகளையும் எடுத்துப் போடாதே என்றதோடு "எனக்காகவும் கொஞ்சம் முத்தங்களை விட்டுவை" என்றான்.

தீமோத்தேயு நமது வாழ்க்கையில் எவ்வளவு நல்ல காரியங்களைக் கொண்டு வந்தான் இப்பொழுது தான் சொல்லிக்கொண்டு இருந்தேன் ஆண்ட்ரூ என்றாள் இவன் பிறந்தது முதல், ஆவிக்குரிய ரீதியில் நாம் எவ்வளவு வளர்ந்திருக்கிறோம் என்று, கொஞ்சம் நினைத்துப் பார் எனச் சொல்லிக்கொண்டே, தீமோத்தேயுவை ஆண்ட்ரூவின் கையில் கொடுத்தாள். சில நிமிடங்கள் அவனை தடவி நீவி, படுக்கையில் தூங்க வைத்தான்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலிருந்து ராஜ்யத்தைப் பற்றியும், சபையைப் பற்றியும், ஆதிக் கிறிஸ்தவர்களைப் பற்றியும், இன்னும் ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறதா என்று பார்க்க வேதாகமத்தையும், ஒத்த வாக்கிய புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு மேஜைக்கு வந்தான், ஆண்ட்ரூ.

அப்போஸ்தலர் நடபடிகளுக்குத் திருப்பி 3ம் அதிகாரத்தை எடுத்து வாசித்தான், ஆண்ட்ரூ. "3ம் அதிகாரம் மற்றுமோர் பிரசங்கம்". பேதுருவும், யோவானும் மக்களை பார்த்து நீங்கள் சிலுவையில் அறைந்த அவர்தான் மெய்யான தேவனுடைய குமாரன் என்று மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். வசனம் 19, 20-ல், பேதுரு கூறும்போது, ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர்

உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" என்கிறான். இந்த வசனப் பகுதியை அப் : 2 : 38 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் பொருத்தமாக இருக்கும். பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

இரண்டு வசனப் பகுதிகளிலேயும் "**மனந்திரும்புதல்**" என்ற பதம் பொதுவானதாக கொடுக்கப்பட்டிருக்கிறது. "**நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்**" என்ற வார்த்தையை "**ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**" என்பதற்கு சமமானதாக உள்ளது. "**உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு**" என்பது "**பாவமன்னிப்புக் கென்று**" என்ற பத்தோடு ஒரே அர்த்தமுடையதாகத் தோன்றுகிறது. "**கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலம் வரும்**" என்பது "**பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்**" என்பதற்கு சரியானதாக உள்ளது.

4ம் அதிகாரத்தில், வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது என்ற பகுதியை வாசித்தாள் ரேச்சல். அதாவது அவர்கள் விசுவாசிக்க மட்டும் செய்தார்களா? அல்லது ஞானஸ்நானம் பெற்றார்களா?

இங்கே எந்த வகையான "**மாதிரி**" கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அறிந்து கொள்ள நாம் இன்னும் நிறைய படிக்க வேண்டும் என்று பதிலளித்தான் ஆண்ட்ரூ. இரட்சிப்பின் திட்டத்திலே ஞானஸ்நானம் ஒரு பங்காக இருக்கும்பொழுது, அவர்கள் விசுவாசித்திருந்தார்களானால் ஞானஸ்நானமும் பெற்றிருக்கமாட்டார்களா? எனவே, இரண்டும் சேர்ந்து நடக்கும் போதுதான் ஒரு மனிதன் இரட்சிப்படைய முடியுமென்று தெரிகிறது.

மீண்டுமாக, வசனம் 12ல் இயேசு கிறிஸ்துவே பிரதான மூலைக் கல்லாயிருக்கிறார். அவர் நாமத்தினால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது என்று கூறுகிறது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்". இயேசு கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே நாம் இரட்சிப்படையும்படியாய், அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் இல்லைதானே? என்றாள் ரேச்சல்.

ஆம், "நீ சொல்வது சரியான அர்த்தத்தைத் கொடுக்க கூடியதாயிருக்கிறது" என்று சொன்னான், ஆண்ட்ரூ. இயேசுக் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடே எழுந்தபடியினாலும், அப்போஸ்தலர்களாலே,

அநேக அற்புதங்கள் நடந்தபடியாலும், ஆரம்ப அதிகாரங்களிலும் இயேசுவைக் குறித்துச் செய்யப்பட்ட பிரசங்கங்களுக்கு அநேகர் செவி கொடுத்த படியாலும், யூத மதத் தலைவர்கள் சபைக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டினதோடல்லாமல், அப்போஸ்தலர்களைக் கைதும் செய்தனர். இப்படி ஒரு மூர்க்கத்தனமான எதிர்ப்பு, இருக்குமென்று அப்போஸ்தலர்கள் கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் என்றான்.

"ஒருவேளை அவர்கள் உண்மையில் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டார்கள்" ஏனெனில் இயேசுவைக் கொலைசெய்து சில காலந்தான் ஆகிறது. அப்போஸ்தலர்கள் அவர் தொடங்கி செய்ததைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று ரேச்சல் தன் கருத்தை தெரிவித்தாள்.

"சரியாகச் சொன்னாய்" ஆனால் எப்படியோ பக்தியுள்ளவர்கள் சத்தியத்தை நேசிப்பவர்கள் என்று நான் எப்போதும் எதிர்பார்க்கிறேன். ஒருவேளை, இன்றைய பிரச்சினை அதுவாக இருக்கலாம் என்றான் ஆண்ட்ரூ. சத்தியத்தைத் தேடும் நமது முயற்சியில், பக்தியுள்ளவர்களென்று எண்ணப்படுகின்ற மக்களை அணுகி, நாம் பேசும் போது, நம்முடைய முயற்சியை அவர்கள் விரும்பாமல் போகலாம். "நாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகளைச் சந்திக்க ஆயத்தம் உடையவர்களாக இருக்க வேண்டும் என கருதுகிறேன். மக்களின் கருத்துக்களா அல்லது உண்மைச் சத்தியமா? எது முக்கியம் என்பதை இப்பொழுது தீர்மானம் செய்து கொள்வது அவசியம்.

"ஆனால் ஒன்று மட்டும் உண்மை" ஆண்ட்ரூ தொடர்ந்தான்என்று **"நம்முடைய வாழ்க்கையில் பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை ஏற்றுக் கொள்வதனால் அது சரியானதாக இருக்க வேண்டும். அடுத்தவர்கள் நம்மைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்பது ஒரு பொருட்டாகவே இருக்கக்கூடாது. பக்திக்குண்டான அனைத்தையும் நாம் செய்தும், வாழ்க்கையின் கடைசியில், அவர் நம்மைப் பார்த்து, மத் 7 : 21ல் உள்ளது போல் "நான் உங்களை அறியேன்" என்று சொல்வதை நான் விரும்பவில்லை.**

ஆண்ட்ரூ பேசிக்கொண்டிருக்கையில் ரேச்சல் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அப்போஸ்தலருடைய செயல்பாடும் அதுவாகவே இருந்தது. இங்கே 19ம் வசனத்தில் கூறுகிறார்கள். "தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே" என்றார்கள். எனவே நாம் வாசிக்கும் போது எவைகளையெல்லாம் வேத வசனத்திலிருந்து கற்றுக் கொள்கிறோமோ அதிலே உறுதியாய் நிற்க பழகிக் கொள்வோம். ஒருவேளை, மற்றவர்கள் அதை விரும்பாவிட்டாலும் நாம் அதில் உறுதியாய் நிற்போம்".

**B.B.சோட்** R.R. நாயகம்

# பேதுரு முதல் போப் ஆண்டவரா?

பரமன் படைத்த புவியில் இன்று, அவர் தோற்றுவிக்காத ஐயாயிரத்துக்கும் அதிகமான, பிரிவினைச் சபைகள் உள்ளன. அவைகளில் முதன்மை பெற்றது ரோமன் கத்தோலிக்கர் அமைப்பு தான். புதிய ஏற்பாட்டு சபையில் இருந்து முதன் முதலில் கி.பி. 606ல் பிரிந்து அவர்கள் தங்களை கத்தோலிக்கர்கள் என அழைத்துக் கொண்டார்கள். இப்படி கர்த்தர் ஏற்படுத்தின சபையில் பிரிவினை உண்டாக்குவார்கள் என பவுல் தீர்க்கதரிசனமாய் விளம்பியிருக்கிறார். 2 தெச : 1-12). கர்த்தரின் ஒரே சபையை (எபே : 4 : 4) பிரித்தவர்கள், பேதுருதான் முதல் போப் என பறைசாற்றுகின்றனர். "போப்" என்ற வார்த்தை "பாபா" என்ற லத்தீன் மொழி வார்த்தையில் இருந்து வந்தது. இதற்கு "பிதா" என்று பொருள். இயேசுவோ மத். 23 : 9ல் பூமியில் ஒருவனையும் உங்கள் பிதா (ஆவிக்குரிய) என்று அழைக்காதிருங்கள் என்றார். அப்படியானால் இயேசுவின் கூற்றுக்கு மாறாக, பேதுரு எப்படி "போப்" ஆக இருந்திருக்க முடியும்? தொடர்ந்து கீழே கவனியுங்கள் :

## அ). பேதுரு முதல் போப் என்பதற்கு வேதாகமத்தில் ஆதாரமேயில்லை.

1. பவுல் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின் மேல் ரோமில் சபையைக் கட்டவில்லை (ரோம : 15 : 20).

   ரோமாபுரிக்கும், பேதுருவின் ஊழியத்துக்கும் சம்மந்தமில்லையென்று தானே இதன் பொருள்.

2. பவுல், ஆவிக்குரிய வரங்களை ரோமர்களுக்கு கொடுக்கும் படிக்கு வருகிறேன் என்றார் (ரோம. 1 : 10).

   பேதுரு தலைவராய் (போப்) இருந்தால், இவர் ஏன் அங்கு செல்லவேண்டும்.

3. ரோமர் : 16 : 3-16ல், பவுல் அநேகருக்கு வாழ்த்துதல் தெரிவித்துள்ளார்.

   ஆனால், அப்பட்டியலில், பேதுருவின் பெயர் இடம் பெறவில்லை.

4. பவுலுடன் லூக்காதான் ரோமபுரியில் இருந்திருக்கிறார்.

   பேதுரு இல்லை.

**ஆ). பேதுரு, போப் அல்ல என்பதற்கு அநேக ஆதாரங்கள் புதிய ஏற்பாட்டில் இருக்கிறது.**

1. பேதுரு : தன்னைப் பணிந்து கொண்டோர்களைக் கடிந்து கொண்டார் அப் : 10 : 25.

   ஆனால், போப் புன் முறுவலுடனல்லவா ஏற்றுக் கொள்கிறார்.

2. எருசலேமில், புறஜாதிகளைக் குறித்தான முடிவை பேதுரு, எடுக்கவில்லை, யாக்கோபுதான் எடுக்கிறார் (அப். 15 : 13, 10).

   இன்றைய போப் இப்படி அனுமதிப்பாரா?

3. பேதுருவை பவுல் முகமுகமாய் எதிர்த்தார் (கலா : 2 : 11)

   போப்பிடம் ஒருவன் இப்படி நடந்துகொள்ளமுடியுமா?

4. பேதுரு திருமணமானவர் 1 கொரி 9 :5 மத். 8 : 14, 15. போப் திருமணமாகதவர்.

5. பேதுருஉடன் மூப்பராக (1 பேதுரு 5 : 1), இருந்துள்ளார்.

   "போப்"க்கு உடன் "போப்"கள் உண்டா?

6. கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார் (எபே : 1 : 22, 23; கொலோ. 1 : 18).

   அப்படியானால், "போப்" எதற்கு தலையாயிருக்கிறார்?

ஆகவே, பேதுரு முதல் போப்பாக இருந்திருக்க முடியாது! முடியாது!!

தமிழில் : ஜே. பிக்கின்ஸ்

***நீ சுகித்து வாழ, ஆத்துமாவை வாழ வை***

*பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.*

**III யோவான்**

# "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்"

நாங்கள் உங்களை, யாத்திராகமம் 20 : 1–17 வரை கருத்தோடு வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்த வசனங்கள் யாவும் விக்கிரகங்களை கண்டனம் செய்கிறது. சில காரணங்களுக்காக மனிதன் எப்போதுமே தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவனாகவே இருக்கிறான். (ரோமர் 1 : 18–32), இந்த ரோமருக்கு எழுதின நிருபத்தில் தேவனற்ற புறஜாதியாரின் அவல நிலையானது விளக்கப்பட்டிருக்கிறது. அவைகளை வாசித்து அறியுங்கள்.

தேவன், இஸ்ரவேலர் கானானுக்குள் நுழைந்தவுடன், அங்கு வார்ப்பிக்கப்பட்ட எல்லா விக்கிரகங்களையும் அழித்துப் போடச் சொன்னார். அத்தேசத்துக் குடிகளை துரத்தி விடும்படி கட்டளை கொடுத்தார். அதோடு மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கச் சொன்னார். (எண். 33 : 52).

இவைகள் தேவனுடைய கட்டளையாக இருந்தும், இஸ்ரவேலர் அநேக ஆண்டுகள் கடைபிடிக்கவேயில்லை. காரணம், இஸ்ரவேலர் விக்கிரக வழிபாட்டுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். இந்த உண்மைகளை அறிந்து கொள்ள ஒருவன் பழைய ஏற்பாட்டை படித்து பார்த்தால் தெரியும். அநேக ராஜாக்களே இஸ்ரவேலர்களை விக்கிரக வழிபாட்டுக்கு வழிநடத்திச் சென்ற கருவிகளாக மாறினர்.

உதாரணமாக, அநேக எபிரேயர் மற்ற கடவுள்களை வழிபாடு செய்தனர். மேடைகளின் பெண் தேவதை – அஸ்தரோத் (2 ராஜா 17 : 10), பாகால் – நிலவள தேவதை, மோளேக்கு – பலிகளின் தேவதை, இவைகளுக்கு, தங்கள் குழந்தைகளை தகன பலியாக செலுத்துவார்கள். இன்னும் அநேக கடவுள்கள் சொல்லப்பட்டுள்ளது. இப்போது இது போதும்.

நாம் ஒரு கேள்வியை எழுப்புகிறோம். நாம் உண்மையிலேயே விக்கிரகங்களை, நாம் எண்ணிக் கொண்டிருக்கிற படி, நம்மை விட்டு விலக்கியிருக்கிறோமா? இல்லை. ஒன்றை கண்டிப்பாக அறிந்து கொள்ளுங்கள், விக்கிரகங்கள் யாவும் அழிவுக்கு எத்தனமானவைகள், ஒருவன் எதை வணங்குகிறானோ அதைப் போலவெ அவன் இருக்கிறான்.

இன்றைய நம்முடைய நவீன உலகத்தின் கடவுள்கள் யாவை? **முதலாவது தொழில் நுட்ப கடவுள்.** எண்ணற்ற மக்கள் நவீன "கணிபொறிகளும்" நவீன விஞ்ஞானமும் மனித சமுதாயத்தின் பல பிரச்சனைகளை தீர்த்துவிடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அது இயலாத காரியம். ஏன்? ஏனென்றால் மனிதன் ஆவியையும் ஆத்மாவையும் உடையவன், அதில் அவனுக்கு "பாவம்" என்ற

பிரச்சினையுண்டு. ஆனால் எந்த "கணிப்பொறியும்" (கம்ப்யூட்டர்) இந்த பிரச்சினையை தீர்க்க இயலாதது. ஆனால், சுவிசேஷம் தேவனுடைய பலமாயிருக்கிறது. இதுவே இந்த பாவ பிரச்சனையை தீர்க்க கூடியது (ரோமர் 1 : 16, மாற்கு 16 : 15 – 16). ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்தியும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால், அவன் எல்லாவற்றையும், இழந்து விடுகிறான். (மத் 16 : 26)

**"பொருளாசை கடவுள்"** என்ற இந்த விக்கிரக வழிபாடு எங்கும் காணப்படுகிறது. ஆயிரக்கணக்கானோர் இன்றைக்கு தங்கள் பொருட் திரட்சியையும், ஆஸ்தியையும் வழிபாடு செய்கின்றனர். கார்கள், வீடுகள், பணம், ஸ்டாக் மார்க்கெட், ஸ்டாக்குகள் பாண்டு பத்திரங்கள், விலையேறப் பெற்ற ஆடைகள், நகைகள் என்று இப்படி எத்தனையோ. இரண்டு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்ய முடி ாது. ஒருவனை வெறுத்து ஒருவனை நேசிக்க வேண்டும். "உலகப் பொருள்களுக்கும், தேவனுக்கும், ஊழியம் செய்ய முடியாது" (மத். 6 : 24), உலகப் பொருள்கள் என்பது மேற்சொல்லப்பட்ட ஐசுவரியங்கள். ஒருவனுடைய வாழ்க்கை பொருளாதார திரட்சியினால் மட்டும் நிறைவு பெறுவது கிடையாது. (லூக் 12 : 13 – 21) பணம் என்பது மதிப்புள்ளது தான். ஆனால் எல்லாவற்றையும் அதினால் வாங்கி விட முடியாது. (பிரசங்கி 8 : 8; 1 தீமோ 6 : 6– 18) பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது.

**"சுய நலக்கடவுள்"** இந்த விக்கிரக கடவுளை பெரும்பாலானவர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். சுயத்தின் மீது நீ சார்ந்திராதே. உன்னுடைய நலனைப் பற்றி நீ சிந்திப்பது நல்லதுதான். ஆனால் அதையே எண்ணி அதில் விழுந்து விடுதல் கூடாது. (ரோமர் 12 : 1–3) மனிதன் தேவனில்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை அவன் தெரிந்து கொள்ள வேண்டும். அதைப் போலவே இயேசு கிறிஸ்து, பரிசுத்த வேதாகமம் போன்றன இல்லாமல் அவனால் எதுவும் முடியாது என்ற உண்மையை தெரிந்துக் கொள்ளுதல் வேண்டும். (யோவான் 15 : 1–7) ஒரு கிரேக்க கதையில் நார்விஸ் என்பவனைப் பற்றி சொல்லியிருக்கிறது. அவனுடைய உருவம் தண்ணீரில் பிரதிபலித்ததைப் பார்த்து இவன் காதல் கொண்டானாம். வெட்கம்! சுயத்தை கடவுளாக வழிபாடு செய்தல், ஒருவன் சிருஷ்கரைச் சார்ந்திராமல் விடுதலையை உணருதல் கடினம். (யோவான் 8 : 32; ரோமர் 1 : 18, 22).

இவைகள் மாத்திரமல்ல, **"செக்ஸ் கடவுள்கள்"** எங்கும் காணப்படுகிறது. செக்ஸ் என்பது பெரிய வியாபாரமாகிவிட்டது. பத்திரிக்கையில் டி.வி.யில் தினசரி பேப்பர்களில், "பில் போர்டு பாடல்களில் செக்ஸ் எல்லாவற்றிலும் நிறைந்து இன்றைக்கு போற்றப்படுகிறது. சிலருக்கு செக்ஸ்" தவிர வேறு எதுவுமில்லை. ஒவ்வொரு நாளும் செக்ஸ் கடவுளை வழிபாடு செய்கின்றனர். செக்ஸ் வெறியை தூண்டக்கூடிய வாழ்க்கை பாணியை பிரத்யோகமாக அமைத்துக்

கொள்கின்றனர். பரிசுத்த வேதாகமத்திற்கு இது வேறுபட்டிருந்தாலும் அதையே நாடுகின்றனர். (ஆதி 2 : 24 – 26; மத் 19 : 3 – 9). ஆடையில்லாமல் உடலை வெளிப்படுத்தி காட்ட எல்லா முயற்சிகளையும் இன்றைக்கு செய்கின்றனர். இன்னும் சில நாட்களில் ஆடையேயில்லாமல் ஆதாம் – ஏவாள் போல் திரிய மனிதன் முயற்சிப்பான். (1 தீமோ : 2 : 9–15) ஆண்களின் உடல்களும் பெண்களின் உடல்களும் பீர் மது பானங்கள் விற்பதற்கும் விளம்பர பொருட்களாக காட்டப்படுகிறது. நாம் ஏறக்குறைய நமக்கிருந்த கொஞ்ச வெட்கத்தையும் இழந்து விட்டோம்.

**"விளையாட்டுக் கடவுள்"** என்ற விக்கிரக வழிபாடு. இலட்சக்கணக்கானவர்கள் வழிபாடு செய்கின்றனர். சில சபை உறுப்பினர்களே கர்த்தருடைய நாளைக் கூட விட்டு இந்த விக்கிரக வழிபாட்டில் சிக்குகின்றனர். ஆனால் ஆண்டவர் என்ன சொன்னார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள்" (மத். 6 : 33) அன்பு சகோதரனே! சகோதரியே! இவைகள் உன்னுடைய வாழ்க்கையை அடிமைப்படுத்த விட்டுவிடாதே! பரலோகம் எந்த விளையாட்டைப் பார்க்கிலும் மிக முக்கியமானது. நீ மற்றவர்களையும் கெடுத்து விடாதே (2 கொரி 10 : 31 – 33).

**"அதிகாரக் கடவுள்கள்"** இது ஒரு விக்கிரக வழிபாடு. சிலர் எல்லோரையும் தன் ஆதிக்கத்தின் கீழ் வைக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். இதற்காக சிலர் பொய் சொல்லுகின்றனர், திருடுகின்றனர், சத்தியத்தை அசத்தியமாக்குகின்றனர். இப்படி ஏமாற்று வழிகள் பலவற்றை கையாளுகின்றனர். இன்றைய நம்முடைய தேர்தல்களில் அநேக பித்தலாட்டங்கள் நடைபெறுவதற்கு இதுவும் ஒரு காரணம். எப்படியாகிலும் ஜெயித்து பதவிக்கு வந்து கொள்ளையடிக்க வேண்டும். இதற்காக அடுத்தவர்களை சிலுவையில் அறையக் கூடிய வழியைக் கூட இவர்கள் செய்வார்கள். புதிய ஏற்பாட்டில் தியத்திரோப்பு அப்படிப் பட்டவன் (2 யோவான் 9–11).

இவைகள் அனைத்தும், பிசாசின் வழிபாடுகள், இயேசு பிசாசை புறக்கணித்தார். எல்லா ராஜ்யங்களையும் உலகத்தையும் காட்டி என்னை தாழ விழுந்து வணங்கினால் உனக்கு தருகிறேன் என்று சொன்னான். இயேசு மரித்துவிட்டார். தேவனாகிய கர்த்தரையே முழுமனதோடு வழிபாடு செய் என்று சொன்னார். (மத் 4 : 1 – 11). இன்றைக்கும் சாத்தனுக்கு சொந்தமான சபைகள் உண்டு. (வெளி 2 :9; 3:9) சாத்தானுக்கு சொந்தமான உபதேசங்கள் உண்டு (1 தீமோ 4 : 1–3) சாத்தானுக்கு சொந்தமான பிரசங்கியார்கள் உண்டு. (2 கொரி 11 : 13 – 15).

ஆகையால்

**எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!**

**தமிழில் வே. தானியேல் துரைராஜன், திருச்சி 1.**

# நில், கவனி, செல்

சாலைகளின் முக்கிய சந்திப்புகளில் இந்த வாசகங்களையும் அதற்கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ள வண்ண விளக்குகளையும் பார்க்கலாம். வண்ண விளக்குகளில் சிவப்பு மஞ்சள் மற்றும் பச்சை நிறங்கள் கொடுக்கப் பட்டுள்ளது. சிவப்பு நிறம் ஆபத்தைக் குறிப்பிடும் எச்சரிக்கைக்காவும், மஞ்சள் நிறம் கவனமாயிருந்து ஆயத்தப்படவும், பச்சை நிறம் முன்னோக்கி செல்லவும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. வாகனத்தில் செல்வோர் இந்த சாலை விதிகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தை நெருங்கும்போது மிகவும் விழிப்பாய் செயல் படுவதை பார்க்கலாம். காரணம், விதிகளை மீறினால் ஏற்படும் ஆபத்து குறித் தும், தண்டனைக்குட்பட வேண்டும் என்பது குறித்தும் உள்ளத்தில் எழும் பயம் தான். அழிந்து போகின்ற அற்பமான உலக வாழ்க்கையின் மீது மனுஷனுக்கு இருக்கின்ற அளவுகடந்த அக்கறை அழியாத விலைமதிக்கமுடியாத ஆன்மீக வாழ்க்கையில் இருப்பதில்லை அது ஏனோ!

மனுஷனை உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவனோடு சஞ்சரித்து வாழ்வதே ஆன்மீக வாழ்க்கை. ஆனால் சிலர் தேவனே இல்லையென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். பலர் தேவன் மீது முழுமையான அன்பும் விசுவாசமும் கொண்டவர்களாக காணப்படுகிறார்கள். இவர்கள், தங்களின் நல்ல செயல்களினால் தேவன் மகிமைப்படுவார் என்றும் அது அவருக்கு பிரியமாயிருக்கும் என்று எண்ணுவதோடு அவ்வாறு செய்வதன் மூலம் தங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்பதும் அவர்களது அசைக்கமுடியாத நம்பிக்கையாயிருக்கிறது. இவ்விதமாக நம்பிக்கை யுடையவர்களின் ஆன்மீக வாழ்க்கை வீணாய் போய்விடாமலிருக்க தேவன் தம்முடைய தாசர்களைக் கொண்டு வேதத்தின் பல இடங்களில் மனிதன் கைக்கொள்ள வேண்டிய தம்முடைய சித்தத்தை அதாவது திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். எனவே மனுஷன் தான் எண்ணுகிறபடி தன்னுடைய ஆன்மீக வாழ்க்கையை செய்ய இயலாது. மனுஷன் தன்னுடைய எண்ணத் தின்படியும், தனக்கு தோன்றின வழியிலும் தேவனை மகிமைப்படுத்தலாம் என்று எண்ணுவதற்கு அவன் எம்மாத்திரம்?! கர்த்தருக்கு ஆலோசனை சொல்ல மனுஷனால் கூடுமோ? கூடாதே!! எனவே தேவனுக்கு பிரியமாய் ஜீவிக்க வேண்டும் என்ற எண்ணமுடைய யாவரும் அவருடைய சித்தத்தின்படி கீழ்படிந்து அவர் காட்டும் வழியில் நடப்பதே ஆன்மீக வாழ்க்கையின் ஆரம்பம். நீதிமொழிகள் என்ற புஸ்தகத்தை எழுதின சாலொமோன் ஞானி கூறுகிறான். **"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் என்று"** (நீதி. 14 : 12).

கிறிஸ்தவ மார்க்கத்தில் தேவனை ஆராதிப்பதிலும், அவரை மகிமைப்படுத்துவதிலும் பல வழிமுறைகளை கையாளக் கூடிய பல பிரிவுகள் காணப்படுகின்றன. அந்த வழிமுறைகளை போதிப்பவரும் பின்பற்றி நடப்போருக்கும் அது செம்மையாக தோன்றுகிறது. ஆனால் தேவன் அதை அங்கீகரிப்பாரா? அவ்வழிகளை பின்பற்றினால் நித்திய ஜீவனை அடையமுடியுமா? ஒருபோதும் முடியாது காரணம், அவைகள் மனுஷனின் எண்ணத்தின்படி தோற்றுவிக்கப்பட்ட வழிகள். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா 55 : 8). அன்பார்ந்த வாசகரே நீங்கள் தேவனை மகிமைப்படுத்த பின்பற்றிச் செல்லும் வழியில் சற்று நில்லுங்கள் என்று உங்களை அன்போடு வேண்டுகிறேன்.

உலகத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களின் நோக்கமும் பரலோகம் சென்றடைய வேண்டும். அங்கே அவர்களுடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கவேண்டும் என்பதே. அன்பார்ந்த வாசகரே உங்களுடைய இந்த நோக்கம் வெற்றியடைய வேண்டுமென்றால் நீங்கள் தற்போது நடந்து கொண்டிருக்கும் வழியிலே மேலும் தொடர்ந்து நடவாமல் நின்று, எது நல்லவழி என்பதை அறிந்து கொள்ள தொடர்ந்து வரும் செய்தியை கவனிக்க வேண்டுகிறேன்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு உங்களை அழைக்கிறார் (மத் 11 : 28). நீங்கள் எதிர்பார்க்கும் இளைப்பாறுதல் இயேசு உங்களுக்கு தரக்கூடியதாய் இருப்பதால் நீங்கள் அந்த இளைப்பாறுதலை உங்கள் எண்ணத்தின்படியும், உங்கள் வழியின் படியும் பெற நினைக்க வேண்டாம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு திட்டவட்டமாக கூறுகிறார் (யோ 14 : 6). எனவே நீங்கள் எதிர்பார்க்கும் இளைப்பாறுதலை பெற விரும்புவீரானால் இயேசு காட்டும் நல்ல வழியை ஏற்றுக் கொண்டு அதிலே நடவுங்கள். மற்றப்படி உங்கள் பிரயாசமெல்லாம் வீணாகும்.

நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். என்றும், நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் என்றும் இயேசு கூறுகிறார். (யோ. 10 : 7, 9). இவ்வுலகத்தில் இயேசு கிறிஸ்துவின் சரீரமாக கருதப்படும் அவருடைய சபையை பரலோகத்தில் உண்டாக்கியுள்ளார் வாசலாகவும் வழியாகவும்

அதற்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. (கொ. 1 : 14), இயேசு அந்த சபையை தேவனுடைய ராஜ்யம் என்றும் குறிப்பிடுகிறார். இந்த ராஜ்யத்தை (சபையை) ஒருவன் காணவேண்டுமானால் அவன் மறுபடியும் பிறக்கவேண்டும் என்றும், ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்றும் மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன் என்றும் இயேசு கூறுகிறார் யோ 3 : 3, 5 இந்த ராஜ்யமாகிய சபையில் நீங்கள் பிரவேசிக்கவில்லையென்றால் நீங்கள் இளைப்பாறுதலை கண்டடைய முடியாது என்பது உறுதி.

இந்த உலகத்தின் அதிபதியாகிய பிசாசு தேவனுடைய திட்டத்திற்கு எதிராக எழும்பி உலகத்தின் ஞானத்தில் தேறின பல பெரிய மனுஷர்களின் மூலமாக கிறிஸ்து இயேசுவின் நாமத்தை கொண்டு சபை என்னும் பல அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளான். இந்த சபைகளில் இருப்போர் இதுவே மோட்சம் செல்ல செம்மையான வழி என்று நம்பவும், இது மரண வழி என்பதை கண்டுகொள்ளாமலும் இருக்கவும் அவர்களின் கண்களை குருடாக்கி வைத்துள்ளான். அன்பான வாசகரே, நீங்கள் சற்று சிந்தியுங்கள். நானே வழி என்று இயேசு கூறுகிறார். இயேசு ஒருவராய் இருக்க அவர் ஸ்தாபித்த வழியும் (சபை) ஒன்றாகத்தானே இருக்கமுடியும்! என் பல சபைகள் இருக்க கூடாதா? அதில் தவறு என்ன என்று எண்ணுகின்றீர்களா? “கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென் என்று பவுல் கூறுகிறான், (ரோ 11 : 34–36). நீங்கள் மனுஷனால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் இருந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தலாம் என்று எண்ணுகிறீர்கள். ஆனால் இயேசுவை விசுவாசிக்கின்ற யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதே அவர் பிதாவை நோக்கி ஏறெடுத்த விசேஷித்த பிரார்த்தனை (யோ 17 : 20, 21). இயேசுவின் சிந்தை இவ்வாறு இருக்க பல சபைகள் இருப்பதால் தவறு என்ன என்று சிந்திப்பவர்கள் கர்த்தரை காட்டிலும் ஞானமுள்ளவர்களோ! இல்லை. ஒருபோதும் இல்லை. ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்களை (இரட்சிக்கப்பட்டவர்களை) கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2 : 47) சபை கிறிஸ்துவின் சரீரம் அவரே அதற்கு தலைவர் (கொ. 1 : 18), நீங்கள் பரலோகம் செல்லவும் உங்கள் ஆத்துமா இளைப்பாறுதலைக் கண்டடையவும் அதுவே நல்ல வழி (யோ 14 : 6). அதுவே பூர்வபாதை என்பதை கவனிக்க வேண்டுகிறேன்.

வழிகளிலே நின்று, பூர்வபதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள்

ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள். (எரே 6 : 16), பரிதாபம்! இயேசு கூறுகிறார் : நான் சாந்தமும் மனதாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைபாறுதல் கிடைக்கும் என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்று (மத் 11 : 29–30).

இந்த கட்டுரையின் மூலம் நீங்கள் அறிந்து கொண்ட சத்தியம் உங்கள் ஆத்துமா இளைப்பாறுதலை கண்டடைய தேவன் வகுத்த வழி. எனவே கிறிஸ்துவை விசுவாசித்து அவரை நேசித்து அவர் மூலம் ஆசிர்வாதங்களை பெற விரும்புவீரானால் அவருடைய உபதேசத்துக்குக் கீழ்படிந்து மனுஷர்களின் உபதேசங்களை மறுத்து, பிரிவினைகளை வெறுத்து நானே வழி என்று கூறும் கிறிஸ்துவின் சபையின் மூலம் இளைப்பாறுதலை கண்டடைய அவர் காண்பித்த நல்ல வழியிலே நடப்போம். ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்கிறது. நம்மில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கி போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கக் கடவோம். (எபி. 4 : 1). ஏனெனில் சுவிசேஷம் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்படுகிறது. கேட்பவர்கள் விசுவாசத்தோடு கேட்டால் அதினாலே, பிரயோஜனமுண்டு. (எபி. 4 : 1– 2).

தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. எபி. 4 : 9. எனவே நமக்கு செம்மையாய் தோன்றும் வழியில் நடப்பதை நிறுத்தி இந்த கட்டுரையின் மூலம் இயேசு காண்பித்த நல்ல வழியை கவனித்து அதிலே செல்வோம் தேவன் நமக்கு இளைப்பாறுதல் தந்தருள்வார்.

**சகோ. ஹென்றி மோகன்**
**நீலகிரி.**

***நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.***

***கலா. 1:8.***

# உங்களுக்காக ஒரு வீடு

ஆங்கில மொழியில், சில வார்த்தைகள் துக்க உணர்வைக் கொண்டு வரக் கூடியதாக இருக்கும். அவைகளில் ஒன்று "தனிமை" என்பது. இன்னும், அதிகமான இரக்க உணர்வையும், பரிதாபத்தையும் ஏற்படுத்தக் கூடிய வேறொரு வார்த்தை "வீடற்றோர்" அல்லது "இருக்க இடமில்லாதவர்" என்பதாகும். இயற்கைச் சீற்றத்தின் மூலம் பேரழிவுகள் ஏற்படும்போது, செய்தித்தாள், வானொலி மற்றும் தொலைக்காட்சியின் வாயிலாக "வீடிழந்தவர்கள்" பற்றி தெரிந்து கொள்ள முடியும். இவையெல்லாவற்றையும் விட அதிக துக்கமானது யாதெனில், இருப்பிடத் தேவையிலிருப்போர், தங்களுக்காக, வீடு ஆயத்தமாக்கப்பட்டு, பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறதென்பதைக் கூட அறிந்து கொள்ளாமலிருப்பதுதான்.

ஆயத்தமாக்கப்பட்ட வீடுகளைக் குறித்து வேதாகமம் பேசுகிறது. ஏதேன் தோட்டமானது, மனிதனுக்கு "முதல் வீடாய்" இருக்கும்படி தேவனால் ஆயத்தமாக்கப்பட்டது. (ஆதி. 2 : 8 – 17). ஒருவன் சொல்லியிருப்பது போல, "ஆதாமுக்கு சந்தோஷமான இடமாய் வீடு இருந்தது. அவர் சந்ததியில் வரும் நல்லவர்களுக்கு வீடே சந்தோஷமான இடமாய் இருக்கிறது". கெட்ட குமாரனுக்கு, ஆயத்தமாக்கப்பட்ட வீடு இருந்தது. ஆனால், அவன் அதை விட்டுச் சென்று விட்டான் (லூக்கா 15 : 11 – 33). மனிதன் தனக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்ளும்படியாய் உலகம் முழுவதும் சுற்றித் திரிந்துவிட்டு, அதை அடைந்து கொள்ளும்படி வீடு திரும்புகிறான்" என்று ஜார்ஜ் மோர் என்பவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். "உனக்கு ஒரு நல்ல வீடு இருந்தது. ஆனால், அதை விட்டு விட்டாய்" என்ற பொருள் தரும் பாடலுக்கு ராணுவ அணி வகுப்பு நடத்தியது எனக்கு நினைவுக்கு வருகிறது.

சரி, ஆயத்தமாக்கப்பட்ட இன்னொரு வீட்டைக்குறித்து நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவால் பேசப்பட்டுள்ளது. அந்த வீட்டில் அவரோடு சேர்ந்து வசிக்க அவர் நம்மை அழைக்கிறார். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு (யோ. 14 : 2). ஒருவனால், கற்பனை செய்ய முடியாத அளவுக்கு பெரிய வீடு, தேவனால், அவருடைய பிள்ளைகளுக்கு ஆயத்தமாக்கப்பட்டுள்ளது. கர்த்தருடன் வாசம் செய்வது குறித்து பவுல் பேசுகிறார் (2 கொரி : 5 : 1–9). பிரசங்கி நூலில் ஞானி சாலமோன் இவ்விதம் கூறுகிறார். "மனிதன் தன் நித்திய வீட்டிற்கு போகிறான்" என்று, (பிர. 12 : 5). நமக்காக, ஒரு வீடு ஆயத்தமாக்கப்பட்டு, நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வது ஒரு பெரிதான காரியமில்லையா?

கடைசியாக ஒரு வார்த்தை. நமக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற வீட்டிற்காக நாம் ஆயத்தமாக வேண்டுமென்று இயேசு கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையை நிச்சயமானதாக்க கற்பாறையின் மீது அஸ்திபாரம் போட்டு கட்டவேண்டுமென்று இயேசு கூறுகிறார். (மத். 7 : 24 –27). அவரே அந்த அஸ்திபாரம், நீங்கள் எந்த அஸ்திபாரத்தின் மீது உங்கள் வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? சிந்தியுங்கள்.

**டோனி லாலி**



# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. **15/-**

முகவரி : *தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
தபால் பெட்டி எண் **27**, காங்கயம் - **638 701.**

*குறிப்பு : தயவு செய்து* **M.O.** *மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.*

# உங்கள் சிந்தனைக்கு

ஒரு ஊரில் ஒரு பணக்கார மாட்டு வியாபாரி இருந்தான். அவன் தன்னுடைய மாடு ஒன்றை பக்கத்து ஊர் சந்தைக்கு ஓட்டிக் கொண்டு போய் விற்பனை செய்ய எண்ணினான். அதற்காக அவன் தன்னுடன் யாரை அழைத்துப் போவது நலம் என்று யோசித்தான். ஒரு பலசாலியை அழைத்துப்போனால் நாம் தனியாக வரும்போது வழியில் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிடுவான். ஒரு புத்திசாலியை அழைத்துக்கொண்டு போனால் நாம் எப்படி? எவ்வளவு? இலாபத்துக்கு வியாபாரம் செய்கிறோம் என்ற வியாபார தந்திரங்களை அறிந்து கொண்டு எல்லோரிடமும் சொல்லி வியாபார ரகசியங்களை வெளிப்படுத்தி விடுவான். ஆகவே யாரை அழைத்து போவது நல்லது என்று யோசித்தான்! யோசித்தான்!! இறுதியில் ஒரு முட்டாளை அழைத்துப்போவது தான் எல்லாவற்றிலும் நல்லது என்று முடிவு செய்து, ஒரு முட்டாளை அழைத்துக்கொண்டு போனான். மாட்டை சந்தையில் ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்று அந்த பணத்தை தன்னுடைய மடியில் பத்திரமாக முடிந்து வைத்துக் கொண்டான். தன்னுடன் வந்த அந்த முட்டாளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தான்.

இப்படியாக, அவர்கள் ஊருக்கு திரும்புவதற்குள் இருட்டாகிவிட்டது. மாட்டு வியாபாரி வழியில் ஓரிடத்தில் தங்க முடிவு பண்ணி தன்னுடன் வந்த முட்டாளிடம் டேய்! நீ, இங்கே படுத்துக் கொள். நான் அந்த செடிகளுக்கு மறைவில் படுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டு படுத்துக் கொண்டான். நடுச்சாமத்தில் திருடர்கள் சிலர் அந்த வழியாக வந்தனர். இருட்டில், முட்டாள் படுத்திருப்பது பார்க்க கூடாமலிருந்ததால், ஒருவன் அவனை காலால் உதைத்து தடுமாறிவிட்டு, தன் சக திருடர்களிடம் இவ்வாறு சொன்னான், "டேய்" இங்கே ஒரு மரக்கட்டை கிடக்கிறது. பார்த்து வாங்கடா, என்றான் இதைக் கேட்ட அந்த முட்டாளுக்கு கோபம் வந்துவிட்டது. யாரைப் பார்த்து மரக்கட்டை என்று சொல்லுகிறாய்? என்று கோபத்துடன் சத்தம் போட்டான். உடனே திருடர்கள் இங்கே ஒருத்தன் இருக்கிறான் பிடியுங்கள் என்று சொல்லி, அந்த முட்டாளை இரண்டு மூன்று பேர் சேர்ந்து பிடித்துக் கொண்டனர். அவன் பாக்கெட்டைப் பாருங்கள் பணம் வைத்திருப்பான் என்று ஒருவன் சொல்ல, அவன் பாக்கெட்டை பரிசோதிக்க வெறும் ஐந்து ரூபாய் மட்டும் இருப்பதைப் பார்த்து திருடர்கள், "பிச்சைக்காரப் பயல்" வெறும் ஐந்து ரூபாய் மட்டும் வைத்திருக்கிறான் என்று சொல்ல, முட்டாளுக்கு பயங்கரமான கோபம் வந்தது. அவன், யாரைப் பார்த்து பிச்சைக்காரப் பயல் என்கிறாய், அதோ அந்த செடிக்கு மறைவில் இருக்கிற எங்க முதலாளியிடம் ஐந்தாயிரம் ரூபாய் இருக்கிறது

தெரியுமா? என்றான் வீராப்புடன். இதைக் கேட்ட திருடர்கள் பாய்ந்து போய், மாட்டு வியாபாரியை மடக்கி பிடித்து, உதைத்து அவனிடமிருந்த பணத்தை பிடுங்கிவிட்டு இருவரையும் துரத்திவிட்டார்கள்.

வீட்டிற்கு வந்த மாட்டு வியாபாரி, வழக்கம் போல் காலை நேரத்தில், பரிசுத்த வேதாகமத்தை எடுத்து படிக்க, அவர் திருப்பின பகுதி நீதிமொழிகள் புத்தகம் 13ம் அதிகாரம். அதில் அவருடைய சிந்தையை தொட்ட வசனம் 20 நாமும் வாசிப்போமா!

**"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்**
**மூடருக்குத் தோழனோ நாமடைவான் " (நீதி. 13:20)**

சிந்திப்போம்! செயல்படுவோம்!!

**சகோ. தானியேல் துரைராஜ்.**

# ஆபகூக் தீர்க்கனின் புத்தகம்

| | | |
|---|---|---|
| பெயரின் பொருள் | : | ஊக்குவிப்பவர் |
| காலம் | : | கி.மு. 606 |
| யாருக்கு | : | யூதாவுக்கு |
| பொருள் | : | அழிவுகாலத்தில் விசுவாசத்தின் பிரச்சினை |
| சிறப்பு | : | நீதியுள்ள தேவன், இஸ்ரவேலை தண்டிக்க துன்மார்க்கமுள்ள தேசத்தை எப்படி பயன்படுத்த முடியும். |
| புறக்குறிப்பு | : | |

| | | |
|---|---|---|
| I | கவனித்துப் பார் | 1.1–23 |
| II | நின்று பார் | 24–20 |
| III | முழங்காலிட்டுப் பார் | 3 அதிகாரம் |

## *இது தரும் பாடங்கள்*

1. நிலைத்திருப்பதற்கு தேவை விசுவாசமே.
2. தீமை தன்னழிவுள்ளது.
3. தெய்வீக ஒழுங்கின் உண்மை.
4. அவநம்பிக்கை கொள்ளும் போது, தேவனிடத்தில் திரும்பி, பதிலுக்காக காத்திருக்க வேண்டும்.
5. சில பிரச்சினைக்கு திட்டமான, நேரடியான தீர்வு இருக்க முடியாது
6. தேவனுக்குரிய காரியங்களை தேவனிடத்தில் விட்டுவிடவேண்டும்.

# தேவத்துவம்

ஆதியிலே, வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவனை குறித்து நாம் ஒரு சில காரியங்களை தியானிப்போம். தேவத்துவம் என்று வேதாகமத்தில் இரு முறை காணப்படுகிறது (ரோமர்:1:20 கொலோ:2:9). உலகமுண்டானது முதற் கொண்டு தேவத்துவத்தில், ஒரே ஆவியும், ஒரே கர்த்தரும், எல்லாருக்கும் ஒரு தேவனும் பிதாவும் உண்டு. இரண்டு உதாரணங்களை காண்போம்.

## படைப்பில்

1. பிதா– திட்டமிடுபவர் :– ஆதி:1:3,6,9.
2. வார்த்தை (குமாரன்) – உண்டாக்குபவர்
3. ஆவியானவர் – ஒழுங்குப்படுத்துபவர்:– ஆதி:1:2

தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்.

(யோபு: 26:13)

## இரட்சிப்பில்

1. பிதா – திட்டமிடுபவர் எபே : 3:9
2. குமாரன் – செயல்படுத்துபவர்
   யோ 1 : 14 பிலிப் : 2:6:8
   யோ 1:29:1 பேது : 1:18, 19, வெளி : 1:5.
3. பரிசுத்த ஆவியானவர் – வெளிப்படுத்துபவர்.
   அ.யோ : 16:13, 1 கொரி : 2:13, 2 பேது : 1:20, 21

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, **Sep 98**
**Sep 98** THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Konar Printers, Madurai. Editor S.Rajanayagam.

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030

PRINTED MATTER

To

BOOK-POST